ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஸிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கறவா மடநாகு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஸிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ கறவா மடநாகு ‖

## திருநறையூர் - 8

‡கறவா மட நாகு⋆ தன் கன்றுள்ளினாற் போல்⋆
மறவாதடியேன்⋆ உன்னையே அழைக்கின்றேன்⋆
நறவார் பொழில் சூழ்⋆ நறையூர் நின்ற நம்பி⋆
பிறவாமை எனைப் பணி⋆ எந்தை பிரானே! (1)

வற்றா முது நீரொடு⋆ மால்வரை ஏழும்⋆
துற்றா முன் துற்றிய⋆ தொல் புகழோனே⋆
அற்றேன் அடியேன்⋆ உன்னையே அழைக்கின்றேன்⋆
பெற்றேன் அருள் தந்திடு⋆ என் எந்தை பிரானே! (2)

தாரேன் பிறர்க்கு⋆ உன் அருள் என்னிடை வைத்தாய்⋆
ஆரேன் அதுவே⋆ பருகிக் களிக்கின்றேன்⋆
காரேய் கடலே மலையே⋆ திருக்கோட்டி
ஊரே⋆ உகந்தாயை⋆ உகந்தடியேனே (3)

புள் வாய் பிளந்த⋆ புனிதா! என்றழைக்க⋆
உள்ளே நின்று⋆ என் உள்ளம் குளிரும் ஒருவா!⋆
கள்வா!⋆ கடன்மல்லைக் கிடந்த கரும்பே⋆
வள்ளால்! உன்னை⋆ எங்ஙனம் நான் மறக்கேனே (4)

வில்லேர் நுதல்⋆ வேல் நெடுங்கண்ணியும் நீயும்⋆
கல்லார் கடுங்கானம்⋆ திரிந்த களிறே⋆
நல்லாய்! நர நாரணனே!⋆ எங்கள் நம்பி⋆
சொல்லாய் உன்னை⋆ யான் வணங்கித் தொழும் ஆறே (5)

பணியேய் பரங்குன்றின்⋆ பவளத் திரளே⋆
முனியே⋆ திருமூழிக்களத்து விளக்கே⋆
இனியாய்! தொண்டரோம்⋆ பருகின்னமுதாய
கனியே⋆ உன்னைக் கண்டு கொண்டு⋆ உய்ந்தொழிந்தேனே (6)

கதியேல் இல்லை⋆ நின்னருள் அல்லதெனக்கு⋆
நிதியே!⋆ திருநீர்மலை நித்திலத் தொத்தே⋆
பதியே பரவித் தொழும்⋆ தொண்டர் தமக்குக்
கதியே⋆ உன்னைக் கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (7)

அத்தா! அரியே! என்று⋆ உன்னை அழைக்க⋆
பித்தா வென்று பேசுகின்றார்⋆ பிறர் என்னை⋆
முத்தே! மணி மாணிக்கமே!⋆ முளைக்கின்ற வித்தே⋆
உன்னை எங்ஙனம் நான் விடுகேனே! (8)

தூயாய்! சுடர் மா மதிபோல்⋆ உயிர்க்கெல்லாம்⋆
தாதாய் அளிக்கின்ற⋆ தண் தாமரைக் கண்ணா!⋆
ஆயா! அலை நீர் உலகேழும்⋆ முன்னுண்ட
வாயா⋆ உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே (9)

‡வண்டார் பொழில் சூழ்⋆ நறையூர் நம்பிக்கு⋆ என்றும்
தொண்டாய்⋆ கலியன் ஒலி செய் தமிழ் மாலை⋆
தொண்டீர்! இவை பாடுமின்⋆ பாடி நின்றாட⋆
உண்டே விசும்பு⋆ உந்தமக்கில்லை துயரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥